DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI

| | | |
|---|---|---|
| Case number | : | **CC 41/2020** |
| Deposition of witness | : | **PW-3** |
| Name | : | **முத்துச்சாமி** |
| Father Name | : | **ரங்கநாயக்கர்** |
| Age | : | **65** |

**Accused present.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 05.03.2026.

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது அணைபாளையத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 2018, செப்டம்பர் மாதம், தேதி சரியாக ஞாபகம் இல்லை, காலை சுமார் 07.00 மணிக்குள்ளாக, சம்பவ சாலையின் அருகில் உள்ள எனது தோட்டத்திற்கு, எனது டிவிஎஸ் வாகனத்தில் சென்று கொண்டிருந்தேன். அப்போது எதிரே கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சுமார் 20 அடி தொலைவில், பக்கத்து தோட்டத்தை சேர்ந்த சிவகாமியின் மகன் படிக்க செல்வதற்காக, அவரது இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டு இருந்தார். அப்போது கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி செங்கல் ஏற்றிக்கொண்டு வந்து கொண்டிருந்தது. அந்த செங்கல் வாகனம் சிவகாமியின் மகன் சென்ற வாகனத்தை தாண்டி செல்ல முயன்ற போது, செங்கல் வாகனத்தின் முன் பகுதி அவரது இருசக்கர வாகனத்தில் பட்டதில் அவர் மறுபக்கம் கீழே விழுந்துவிட்டார்.

2. அவ்வாறு கீழே விழுந்ததில் அவருக்கு தலை மற்றும் நெஞ்சு பகுதியில் காயம் ஏற்பட்டது. நாங்கள் தகவல் சொன்னதன் பேரில், ஆம்புலன்ஸ் வந்தது. ஆம்புலன்ஸில் அந்த நபரை ஏற்றிக்கொண்டு

சென்று விட்டார்கள். செங்கல் வாகனத்தை ஓட்டியது யார் என்று நான் பார்க்கவில்லை. இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

எதிரி தரப்பில் வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2026.03.05 13:42:28 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.